# கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலினை பல்வேறு கட்சிகள் - அமைப்பினர் சந்தித்து - தி.மு.க. கூட்டணிக்கு ஆதரவு!



கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (19.3.2024) சென்னை, அண்ணா அறிவாலயத்தில், மனித நேய மக்கள் கட்சித் தலைவரும், சட்டமன்ற உறுப்பினருமான பேராசிரியர் ஜவாஹிருல்லா சந்தித்து மக்களவை தேர்தலில் தி.மு.க. கூட்டணிக்கு ஆதரவு தெரிவித்தார். உடன் கழகப் பொருளாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான டி.ஆர்.பாலு, கழக முதன்மைச் செயலாளரும், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சருமான கே.என். நேரு, பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு, அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி, சட்டமன்ற உறுப்பினர் ப.அப்துல் சமது மற்றும் நிர்வாகிகள் உள்ளனர்.



கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (19.3.2024) சென்னை, அண்ணா அறிவாலயத்தில், ஆதித்தமிழர் பேரவை கட்சியின் தலைவர் அதியமான், நிர்வாகிகளுடன் சந்தித்து மக்களவை தேர்தலில் தி.மு.க. கூட்டணிக்கு ஆதரவு தெரிவித்தார். உடன் கழகப் பொருளாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான டி.ஆர்.பாலு, நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.ராசா மற்றும் நிர்வாகிகள் உள்ளனர்.



கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (19.3.2024) சென்னை, அண்ணா அறிவாலயத்தில், சமத்துவ மக்கள் கழகத் தலைவர் எர்ணாவூர் நாராயணன் நிர்வாகிகளுடன் சந்தித்து மக்களவை தேர்தலில் தி.மு.க. கூட்டணிக்கு ஆதரவு தெரிவித்தார். உடன் கழகப் பொருளாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான டி.ஆர்.பாலு, துணை பொதுச் செயலாளர் முன்னாள் அமைச்சர் முனைவர் க.பொன்முடி, நாடாளுமன்ற உறுப்பினர் திருச்சி சிவா மற்றும் நிர்வாகிகள் உள்ளனர்.



கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (19.3.2024) சென்னை, அண்ணா அறிவாலயத்தில், மனிதநேய ஜனநாயக கட்சி தலைவர் தமிமுன் அன்சாரி, நிர்வாகிகளுடன் சந்தித்து மக்களவை தேர்தலில் தி.மு.க. கூட்டணிக்கு ஆதரவு தெரிவித்தார்.

“தமிழ்நாட்டுக்கு பிரதமர் மோடி எத்தனை முறை வந்தாலும் தாமரை மலரவே மலராது” - வைகோ!

## தேர்தல் விதிமுறையை மீறிய பிரதமர் மீது தேர்தல் ஆணையத்திடம் புகார்!

### இந்திய கம்யூனிஸ்ட் கட்சி தமிழ் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் பேட்டி!





சென்னை, மார்ச் 21 -

தேர்தல் விதிமுறைகளை மீறிய பிரதமர் மோடி மீதும், பா.ஜ.க., மீதும் தேர்தல் ஆணையத்தில் புகார் அளிக்கப்படும் என இந்திய கம்யூனிஸ்ட் மாநிலச் செயலாளர் முத்தரசன் தெரிவித்துள்ளார்.

தமிழ்நாட்டில் தி.மு.க. தலைமையிலான இந்தியா கூட்டணியில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சிக்கு திருப்பூர் தொகுதியும், நாகை தொகுதியும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. திருப்பூர் தொகுதியில் சுப்பராயனும், நாகை தொகுதியில் வை.செல்வராஜியும் போட்டியிடவுள்ளதாக அக்கட்சி அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளது.

இந்நிலையில், மாநிலச் செயலாளர் முத்தரசன் தலைமையில் இந்திய கம்யூனிஸ்ட் வேட்பாளர்கள் சுப்பராயனும், செல்வராஜியும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் சென்னை அண்ணா அறிவாலயத்தில் நேரில் சந்தித்துவாழ்த்துப்பெற்றனர்.

இதன்பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய முத்தரசன், தமிழ்நாடு மற்றும் புதுச்சேரியில் 40 தொகுதிகளிலும் இந்தியா கூட்டணி அமோக வெற்றி பெறும் என்று தெரிவித்தார். பிரதமர் மோடி தேர்தல்விதிமுறைகளை அப்பட்டமாக மீறி வருகிறார் என்று முத்தரசன் குற்றம்சாட்டினார்.

தேர்தல் விதிமுறைகளை மீறிய பிரதமர் மோடி மீதும், பா.ஜ.க. மீதும் தேர்தல் ஆணையத்தில் புகார் அளிக்கப்படும் என்றும் இரா. முத்தரசன் தெரிவித்தார்.

**ம.தி.மு.க. வைகோ பேட்டி!**

அண்ணா அறிவாலயத்துக்கு ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோவுடன் வருகை தந்த அக்கட்சியின் திருச்சி தொகுதி வேட்பாளர் துரை வையாபுரி, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேரில் சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.

இதனையடுத்து செய்தியாளர்களிடம் பேசிய வைகோ, அளவுக்கு அதிகமான பொய்களை பேசி வருகிறார் பிரதமர் மோடி என்று சாடினார்.

நாடாளுமன்றத் தேர்தலுடன் பா.ஜ.க.வின் ஆட்டம் அனைத்தும் காணாமல் போகும் என தெரிவித்த வைகோ, தமிழ்நாட்டிற்கு பிரதமர் எத்தனை முறை வந்தாலும் பா.ஜ.க.வின் தாமரை மலரவே மலராது என்றும் திட்டவட்டமாக தெரிவித்தார்.

## நாடு மாற்றத்தை விரும்புகிறது!

### அகில இந்திய காங்கிரஸ் கட்சித் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே பேச்சு!



புதுடெல்லி, மார்ச் 21-

காங்கிரஸ் கட்சியின் தேர்தல் அறிக்கையை மக்களிடம் எடுத்துச்செல்ல வேண்டும் என அக்கட்சியின் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் உள்ள அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டி தலைமையகத்தில் காங்கிரஸ் கட்சியின் செயற்குழு கூட்டம் அக்கட்சித் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே தலைமையில் நடைபெற்றது.

இந்த கூட்டத்தில் காங்கிரஸ் தலைவர், முன்னாள் தலைவர்கள் சோனியா காந்தி, ராகுல் காந்தி மற்றும் காங்கிரஸ் தலைவர்கள் பலரும் பங்கேற்றனர்.

காங்கிரஸ் கட்சியின் தேர்தல் அறிக்கை குறித்து ஆலோசனை நடத்த செயற்குழு கூட்டம் நடைபெற்றது. இந்த கூட்டத்தில் மல்லிகார்ஜுன கார்கே உறுப்பினர்களை வரவேற்றுப் பேசினார்.

தேர்தல் அறிக்கையில் என்ன வாக்குறுதி அளிக்கப்பட்டிருந்தாலும் கட்டாயம் அமல்படுத்தப்படும்.

“ஆவாஸ் பாரத் கி” என்று அழைக்கப்படும் ஆன்லைன் இணையதளம் மூலமாகவும் ஆலோசனைகள் மற்றும் கருத்துகள் கோரப்பட்டதாக அவர் கூறினார்.

தேர்தல் அறிக்கையில் என்ன வாக்குறுதி அளிக்கப்பட்டிருந்தாலும் கட்டாயம் அமல்படுத்தப்படும். தேர்தல் அறிக்கையில் வாக்குறுதிகள் அளிப்பதற்கு முன் அந்த வாக்குறுதிகள் நிறைவேற்றப்படுவதை உறுதி செய்ய ஆழமாக ஆலோசிக்கப்பட்டுள்ளது.

நமது தேர்தல் அறிக்கைக்கு மக்கள் மத்தியில் வரவேற்பு கிடைக்கவும், நமது வாக்குறுதிகள் ஒவ்வொரு வீட்டிற்கும் கொண்டு செல்லப்படுவதையும் நிர்வாகிகள் உறுதி செய்ய வேண்டும்.

நகரங்கள், கிராமங்களில் வசிக்கும் காங்கிரஸ் தொண்டர்கள் ஒவ்வொரு வீட்டிற்கும் தேர்தல் அறிக்கையைக் கொண்டு செல்ல வேண்டும் என்றார்.



நடைபெறவிருக்கும் நாடாளுமன்றத் தேர்தலையொட்டி வருகின்ற 22ஆம் தேதி திருச்சிசிறுகனூரில் நடைபெறவிருக்கும் மாபெரும் பொதுக்கூட்டத்தில் பெரம்பலூர் மற்றும் திருச்சியில் போட்டியிடும் வேட்பாளர்களை அறிமுகம் செய்து சிறப்புரையாற்றகழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பங்கேற்பதையொட்டி பொதுக்கூட்ட ஏற்பாடுகளை கழக முதன்மைச் செயலாளரும் நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சருமான கே.என்.நேரு ஆய்வு செய்தார். அவருடன் மத்திய மாவட்டச் செயலாளர் வைரமணி, மாநகராட்சி மேயர் அன்பழகன், பெரம்பலூர் எம்.எல்.ஏ. பிரபாகரன் மற்றும் கழக நிர்வாகிகள் இளங்கோவன், சமயபுரம் ராஜசேகர், லட்சுமணன் ஸ்ரீதர், கிராப்பட்டி செல்வம், மண்டி சேகர், செல்வம் ம.தி.மு.க. வெல்லமண்டி சண்முகம், சீனிவாச பெருமாள், கமல் முஸ்தபா, காங்கிரஸ் கலை, உத்தமர் சீவி ராஜேந்திரன் உட்பட பலர் உடன் சென்றனர்.



இந்தியா கூட்டணியின் தஞ்சை நாடாளுமன்றத் தொகுதி அனைத்துக் கட்சி கூட்டத்தில் தஞ்சை மத்திய மாவட்டக் கழகச் செயலாளர் துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ. தேர்தல் பணிகள் குறித்து ஆலோசனை நடத்தினார். இக்கூட்டத்தில் தஞ்சை தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர் கா.அண்ணாதுரை எம்.எல்.ஏ, டி.கே.ஜி.நீலமேகம் எம்.எல்.ஏ, இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி மாவட்டத் தலைவர்கள் டி.ஆர்.லோகநாதன், பி.ஜி.ராஜேந்திரன், திராவிடர் கழகம் சார்பில் அருணகிரி, ஜெயகுமார், ம.தி.மு.க வி.தமிழ்செல்வன், துரை.சிங்கம், சி.பி.ஐ மு.பாரதி, சி.பி.ஐ(எம்) சின்னை பாண்டியன், வி.சி.க ஜெயசங்கர், இடிமுரசு இலக்குமணன், சா.தமிழன், மற்றும் தோழமைக் கட்சியினர் ஜெய்னுல் ஆபுதீன், அப்துல் மஜித், க.அண்ணாதுரை உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.